தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநரின் ( மேல்நிலைக்கல்வி )

செயல்முறைகள், சென்னை – 600 006.

ந.க.எண். 9829 / டபிள்யு2 / இ1 /2023 , நாள். 23. 02 .2023 .

பொருள் பள்ளிக்கல்வி - மேல்நிலைக்கல்விப்பணி – 01.01.2013 நிலவரப்படி முதல் 01.01.2021 நிலவரப்படி வரை உள்ள காலத்திற்கு பதவி உயர்வு மூலமாக கணிதம், இயற்பியல் , வேதியியல் , தாவரவியல் , விலங்கியல் மற்றும் உயிரியல் பாட முதுகலைப் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்றவர்களுக்கு முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன் முறை ஆணை வழங்குதல் தொடர்பாக.

,பார்வை

1) அரசாணை நிலை எண் 720 பள்ளிக் கல்வித் துறை நாள் 28.04.1981
2) அரசாணை நிலை எண் 101 பள்ளிக் கல்வி ( ப.க.1(1) ) துறை நாள் 18.05.2018.
3) அரசாணை நிலை எண் 14 பள்ளிக் கல்வித் துறை, நாள் 30.01.2020.
4) அரசாணை நிலை எண் 151 பள்ளிக் கல்வி ( ப.க.1(1) ) துறை நாள் 09.09.2022.
5) சென்னை –6, பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் செயல்முறைகள் நகஎண் 39995 / டபிள்யு2 / இ1 /2013 , நாள். 28.12.2013 மற்றும் மேற்காண் பாடங்களுக்குரிய செயல்முறைகள்

பார்வை 5ல் காண் செயல்முறைகளின் மூலமாக 01.01.2013 நிலவரப்படி முதல் 01.01.2021 நிலவரப்படி வரை உள்ள காலத்திற்கு பதவி உயர்வு மூலமாக கணிதம், இயற்பியல் , வேதியியல் , தாவரவியல் , விலங்கியல் மற்றும் உயிரியல் பாட முதுகலைப் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்றவர்களுக்கு முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன் முறை செய்யப்படாமல் நிலுவையில் உள்ள முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் சார்பான கருத்துருக்களை கீழ்காண் விவரங்களுடன் உடனடியாக அனுப்பிவைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1) சார்ந்த ஆசிரியரின் விண்ணப்பம்
2) தலைமையாசிரியரின் முகப்புக் கடிதம்
3) பணிவரன் முறை கோரும் கருத்துரு விபரப்படிவம்
4) பணிக்காலம் கணக்கீட்டுத் தாள்
5) பணியில் சேர்ந்த நாள் முதல் பணிக்காலம் சரிபார்த்த விபரச் சான்று
6) தற்செயல் விடுப்பு நீங்கலான பிற விடுப்புகள் விவரம்
7) பதிவுத் தாள் மற்றும் ஆசிரியரின் பணிப்பதிவேட்டின் முதல் பக்க நகல்
8) ஆசிரியரின் நியமன ஆணையின் ( பட்டதாரி மற்றும் முதுகலை ஆசிரியராக பதவி உயர்வுக்கான பதிவு ) நகல் மற்றும் பணிப்பதிவேட்டில் பதியப்பட்ட பக்க நகல்
9) கல்விச் சான்றுகளின் நகல்கள் மற்றும் உண்மைத்தன்மை பதியப்பட்ட பணிப்பதிவேட்டின் பக்க நகல்

10) கீழ்நிலை பதவியில் பணிவரன் முறை மற்றும் தகுதிகாண் பருவம் பதியப்பட்ட பணிப்பதிவேட்டின் பக்க நகல்

11) சார்ந்த ஆசிரியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கை / குற்றச் சாட்டுகள்/ தண்டனைகள் ஏதும் நிலுவையில் இல்லை என்பதற்கான சான்று
12) மேற்காண் அனைத்து விவரங்கள் சரியாக உள்ளது என பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலரால் சான்று அளிக்கப்பட வேண்டும்

சார்ந்த முதுகலைப் பட்டதாரி ஆசிரியரின் அசல் பணிப்பதிவேடு கருத்துருக்களுடன் அனுப்புதல் கூடாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிக் கல்வி இணை இயக்குநர்
(மேல் நிலைக் கல்வி) 23/2/23

23.02.2023

பெறுநர்(மின்னஞ்சல் வழியாக)

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

www.Padasalai.Net